KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 6, No. 03 (2026) 6

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Imapact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: 10.63300/kijts603112026.20

ARTICLES

பரிபாடல் இலக்கியத்தில் திருப்பரங்குன்றம்: வழிபாட்டிற்கும் அகவாழ்வுக்குமான பண்பாட்டு நிலவெளி

Thiruparankundram in Paripatal Literature: A Cultural Landscape for Worship and Love

VASANTHI V[1,*], Dr. MEENAKSHI V[2]

[1] Ph.D Research scholar(Full Time), (BDU) - Department of Tamil -Bishop heber college (Autonomous)-(Affiliated to Bharathidasan University) – Tiruchirapalli,620017 – Tamilnadu – India

[2] Research Supervisor – Assistant professor- Department of Tamil - Bishop heber college (Autonomous)-(Affiliated to Bharathidasan University) – Tiruchirapalli,620017 -Tamilnadu-India

***Corresponding author:** VASANTHI V, yuvanbagyavasi@gmail.com

ORCID iD: VASANTHI V https://orcid.org/0009-0002-4583-9347 · Dr. MEENAKSHI V https://orcid.org/0000-0003-0537-1268

ARTICLE INFO

Article history
Received: 10 October 2026
Revised: 11 October 2026
Accepted: 15 October 2026

Article ID
KIJTS-2026-0018

Peer review
Double-blind peer review

Keywords
Cultural landscape
Literary geography
Paribadal
Thiruparankundram

ABSTRACT

This article attempts to explore the ancient landscape of Thiruparankundram, which dates back two thousand years, through the literature of Paripatal. The classical Tamil text Paripadal describes the geological structure of the city of Madurai, which is a part of Tamil Nadu, the history of the gods worshipped there, the methods of worship and human love. In it, the connection between the landscape of Thiruparankundram, a hilly place which is a part of Madurai, and the ancient Tamil people is essential. The life experiences of the ancient Tamil people are related to nature. Therefore, the natural environment of Thiruparankundram, the inexhaustible spring water and the creatures that lived there have been the reason for the connection between the land and the people. Moreover, since the mountain was a place beloved by humans in Tamil Nadu, that landscape has merged with the life of the Tamil people. According to Tamil tradition, a mountain-based place is beloved by humans. Since Murugan was seen as the god of the land and love, they converted Thiruparankundram into the abode of Murugan. Therefore, the cultural landscape of the temple, which emerged based on the nature and worship of Murugan, reveals the temple as a symbol of love. The relationship that the ancient Tamil people had with the cultural landscape of Thiruparankundram, the natural elements of the land, and their integration of it with their lives has been documented in the form of paripatal poems.

How to cite this article: VASANTHI V, & Dr. MEENAKSHI V (2026). பரிபாடல் இலக்கியத்தில் திருப்பரங்குன்றம்: வழிபாட்டிற்கும் அகவாழ்வுக்குமான பண்பாட்டு நிலவெளி. *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *6*(03), 273–283. https://doi.org/10.63300/kijts603112026.20
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

பரிபாடல் இலக்கியத்தில் திருப்பரங்குன்றம்: வழிபாட்டிற்கும் அகவாழ்வுக்குமான பண்பாட்டு நிலவெளி

வசந்தி.வே, முனைவர் பட்ட ஆய்வாளர் (முழுநேரம்), (BDU 2210632780062), தமிழாய்வுத் துறை - பிஷப் ஹீபர் கல்லூரி,(தன்னாட்சி) - (பாரதிதாசன் பல்கலைக் கழகத்துடன் இணைவு பெற்றது) – திருச்சிராப்பள்ளி - 620017.

Mail id:yuvanbagyavasi@gmail.com - Mobile:9578449790 - ORCID ID: 0009-0002-4583-9347

முனைவர் மீனாட்சி. வீ, நெறியாளர் – உதவிப் பேராசிரியர் - தமிழாய்வுத் துறை - பிஷப் ஹீபர் கல்லூரி,(தன்னாட்சி) - (பாரதிதாசன் பல்கலைக் கழகத்துடன் இணைவு பெற்றது) – திருச்சிராப்பள்ளி - 620017.

Mail id:mahizhnila@gmail.com - Mobile: 9790382356 - ORCID ID: 0000-0003-0537-1268

ஆய்வுச் சுருக்கம்:

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட திருப்பரங்குன்றத்தின் தொன்மையான நிலவெளியைப் பரிபாடல் இலக்கியத்தின் வழியாக இக்கட்டுரைக் காண முற்படுகிறது. செவ்வியல் தமிழ் நூலான பரிபாடல் தமிழ்நாட்டின் ஒரு பகுதியாக விளங்கும் மதுரை மாநகரின் நிலவியல் அமைப்பு, அங்கு வழிபடப்பட்ட கடவுள்களின் வரலாறு,வழிபாட்டு முறைகள் மற்றும் மானுட அன்பு ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றது. அதில் மதுரையின் ஒரு பகுதியாக இருக்கும் , மலை சார்ந்த இடமான திருப்பரங்குன்றத்தின் நிலவெளிக்கும், பண்டைய தமிழ் மக்களுக்குமானத் தொடர்பு இன்றியமையாதது.தொல்தமிழ் மக்களின் வாழ்க்கை அனுபவங்கள் இயற்கை சார்ந்ததாகும். அதனால் திருப்பரங்குன்றத்தின் இயற்கைச் சூழல், வற்றாத சுனை நீர் மற்றும் அங்கு வாழ்ந்த உயிரினங்கள் போன்றவை நிலத்துக்கும் மக்களுக்குமான தொடர்புக்குக் காரணமாக இருந்துள்ளன. மேலும் தமிழ்நாட்டில் மானுட அன்புக்குரிய இடமாக மலை இருந்ததால் அந்நிலவெளி தமிழ் மக்களின் வாழ்க்கையோடு ஒன்றிணைந்துவிட்டது. தமிழ் மரபுப்படி மலை சார்ந்த இடம் என்பது மானுட அன்புக்குரியதாகும். அந்நிலம் மற்றும் அன்பு ஆகியவற்றிக்குரிய கடவுளாக முருகன் காணப்பட்டதால், திருப்பரங்குன்றதினை முருகனுக்குரிய உறைவிடமாக மாற்றி அமைத்திருந்தனர். எனவே அக்குன்றின் இயற்கை மற்றும் முருகன் வழிபாடு சார்ந்து தோற்றம்பெற்ற பண்பாட்டு நிலவெளி அக்குன்றினை அன்பின் அடையாளமாக வெளிப்படுத்துகின்றது. இத்தகைய திருப்பரங்குன்றத்தின் பண்பாட்டு நிலவெளியுடன் பண்டைய தமிழ் மக்கள் கொண்டிருந்த உறவு நிலையையும், அந்நிலத்தின் இயற்கைக் கூறுகளையும், அதனை தங்கள் வாழ்க்கையோடு ஒன்றிணைத்துக் கொண்ட நிலையையும் பரிபாடல் செய்யுள் வடிவில் ஆவணப்படுத்தியுள்ளது.

திறவுச்சொற்கள்

1.பண்பாட்டு நிலவெளி 2. இலக்கிய புவியியல் 3. பரிபாடல் 4. திருப்பரங்குன்றம் 5. முருகன் வழிபாடு

முன்னுரை

தொல்பழங்கால மக்கள் தாங்கள் வாழ்ந்த நிலப்பகுதியின் இயற்கை அமைப்புடன் இணைந்து வாழ்ந்துள்ளனர். அதன் காரணமாக அம்மக்கள் உருவாக்கிய பண்பாடும் இயற்கை சார்ந்து அமைந்திருந்தது. அத்தகைய பண்பாடு தமிழ்நாட்டில் காணப்பட்டதைச் செவ்வியல் தமிழ் இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன.தென்தமிழ்நாட்டின் மதுரை நகரத்தின் பண்பாட்டு நிலவெளிகளை அறிந்து கொள்ள பரிபாடல் இலக்கியம் வழிவகைச் செய்கின்றது. மதுரை நகரத்து மக்கள் அப்பகுதி நிலத்துடன் தங்களை இணைத்துக் கொண்டதன் வெளிப்பாடாக அந்நிலம் சார்ந்த பண்பாடு அங்கு காணப்பட்டுள்ளது. பரிபாடல் குறிப்பிடும் மதுரையின் நிலவெளிகளில் ஒன்று ‘திருப்பரங்குன்றம்’ ஆகும். மலை நிலமான அதன் இயற்கைக் கூறுகளுடன் மக்கள் இணையும் பொழுது அது பண்பாட்டு நிலவெளியாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மக்கள் ஒரு நிலவெளியுடன் இணைவதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன. திருப்பரங்குன்றத்தின் நிலவெளியை மக்கள் பயன்படுத்தியதற்கான காரணம்,அதனால் மாற்றம் அடைந்த அதன் நிலவெளிக் கூறுகள் மற்றும் அந்நிலவெளிக்கும் மதுரை மக்களுக்குமானத் தொடர்பு ஆகியவற்றை பரிபாடல் பல இடங்களில் விளக்குகின்றது.இடத்துக்கும் மக்களுக்குமான உறவை இலக்கியங்கள் எழுத்தின் வழியாக எடுத்துக்காட்டுவதால் நாம் சென்று காணமுடியாத இடத்தையும் இடஞ்சார்ந்த நிகழ்வுகளையும் அறிந்ததுகொள்ள முடிகின்றது. காலம் காலமாக நடைமுறையில் இருந்த தமிழர்களின் மரபானது நிலத்துக்கும் அவர்களின் வாழ்க்கைக்கும் இருந்த பிணைப்பாகும். தமிழர்களின் நிலமானது, அவர்களின் வாழ்க்கைமுறை அல்லது உணர்வை வெளிப்படுத்தியது. தமிழ்நாட்டில் நிலத்துடன் மக்கள் பிரிக்கமுடியாத வகையில் ஒன்றிணைந்து காணப்பட்டனர். இதற்கு சான்றாகத் தமிழ் இலக்கியங்கள் காணப்படுகின்றன. இலக்கியத்தின் இடஞ்சார்ந்த நிகழ்வுகள், இட உணர்வு மற்றும் புவியியல் கூறுகள் ஆகியவற்றை இலக்கிய எழுத்தின் வழியாக ஆராயமுடியும். அவ்வகையில் பரிபாடல் வெளிப்படுத்தும் இடஞ்சார்ந்த நிகழ்வுகள் தமிழர் மரபோடு தொடர்புடையவை. பண்டைய காலத்தில் தமிழர்கள் தங்கள் உணர்வுகளை தங்கள் நிலத்துடன் இணைத்து வாழ்ந்துள்ளனர். அவர்களின் உணர்வுகளை வெளிப்படுத்துவதாக நிலங்கள் வகைப்படுத்தப்பட்டு இருந்தன. அவற்றுள் புணர்தலுக்கு உரிய இடமாக மலை நிலம் (குறிஞ்சி)இருக்கின்றது. பரிபாடல் குறிப்பிடும் மதுரையின் மலைப் பகுதி, திருப்பரங்குன்றம் என்பதால் மக்கள் அதனோடு பிரிக்க முடியாத வகையில் ஒன்றிணைந்து இருந்தனர். அவர்களுக்கும் குன்றதுக்குமான உறவை அங்கு கோயில் கொண்டுள்ள முருகன் வழிபாட்டு முறைகளாலும், அங்கு நிகழ்ந்த களவு கற்பு நிகழ்ச்சிகளாலும் மற்றும் அவ்விடத்துடன் அவர்களுக்கு இருந்த அன்பினாலும் அறியமுடிகிறது. இலக்கியப் புவியியல் அணுகுமுறையில் பரிபாடல் இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு பண்டைய கால திருப்பரங்குன்றம் நிலவெளிக்கும் மக்களுக்குமான இணைப்பையும், அதனால் வெளிப்படும் அவர்களின் இட உணர்வையும் இக்கட்டுரை ஆராய்கிறது. பரிபாடல்

இலக்கியத்துக்கு பொ. வெ. சோமசுந்தரனார் மற்றும் ஆர்.சாரங்கபாணி ஆகியோர் எழுதிய உரைவிளக்கம் இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

பண்பாட்டு நிலவெளி (Cultural Landscape)-மனித செயல்பாட்டின் அடையாளம்:

மனிதன் தோற்றுவிக்கும் பண்பாட்டிற்கு அடிப்படையாக இருப்பது நிலவெளியாகும். அந்நிலவெளியானது "இயற்கை அமைப்பினாலும் பண்பாட்டினாலும் உருவாகி இருக்கின்றது" (Land and Life,ப.343). மனிதன் தான் அன்றாடம் வாழும் பகுதியில் கிடைக்கும் அல்லது பயன்படுத்தும் பொருட்களில் இருந்து பண்பாட்டு பொருள் வடிவங்களை உருவாக்கிக் கொள்கிறான் (Handbook of cultural geography,ப.3). எனவே மனித செயல்பாட்டின் காரணமாக மாற்றி அமைக்கப்பட்ட நிலவெளியானது கலாச்சார மதிப்புகள் மற்றும் அதன் சமூக அடையாளம் ஆகியவற்றை வெளிப்படுத்தும் பண்பாட்டு நிலவெளியாக அமைகின்றது. "இயற்கை நிலவெளியிலிருந்து பண்பாட்டுக் குழுக்களால் வடிவமைக்கப்படும் பண்பாட்டு நிலவெளியானது" (Land and Life, ப.343) பூமியின் மேற்பரப்பை வகைப்படுத்தும் "பண்பாட்டுப் பொருள் கூறுகளான கட்டிடங்கள், விவசாய கட்டமைப்புகள், போக்குவரத்து, பொழுதுபோக்கு, மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை,இருப்பிடம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்" (Balasubramanian,2018). இதனடிப்படையில் பண்பாட்டு நிலவெளியானது குறிப்பிட்ட இடத்தின் தனித்தன்மைகளை வெளிப்படுத்தும் என்பது தெளிவாகிறது. எனவேதான் பண்பாட்டு பொருள் கூறுகளைக் கொண்ட இயற்கை நிலவெளியோடு தொடர்புடைய பண்பாட்டு நிலவெளியானது குறிப்பிட்ட சமூகத்தின் அடையாளமாகக் கருதப்படுகின்றது. இயற்கை மற்றும் மனித செயல்பாடுகளின் விளைவாக மனிதனால் உணரப்பட்ட நிலவெளியானது (Kõivupuu,P.1) மனித வரலாற்றையும், முன்னோர்களின் மதிப்புகளையும் விளக்குகின்றது.

இந்தப் பண்பாட்டுப் பொருள் கூறுகள் மற்றும் இயற்கை, உயிரியல் மற்றும் பண்பாட்டு பன்முகத்தன்மை ஆகியவற்றிற்கு இடையிலான இணைப்பைப் பண்பாட்டு நிலவெளிகள் வெளிப்படுத்துகின்றன என்று ரோஸ்லர் குறிப்பிடுகின்றார் (Taylor,ப.540).எனவே பண்பாட்டு நிலவெளியினை அடிப்படையாகக் கொண்டு மக்கள் எவ்வாறு நிலவெளியுடன் இணைப்பை ஏற்படுத்திக் கொள்கின்றனர், அதனால் தோற்றம் பெறும் பண்பாட்டுக்கும் அச்சூழலுக்குமான தொடர்பு, அதன் சமூக மதிப்பு மற்றும் அதன் அடையாளம் ஆகியவற்றை அறிந்து கொள்ள முடிகின்றது. பண்பாட்டு நிலவெளியானது குறிப்பிட்ட சமூகம் மற்றும் இடத்துக்கான அடையாளமாகத் தன்னை வெளிப்படுத்திக்கொள்கிறது.

பரிபாடல் : ஓர் நிலவியல் இலக்கியம்

குறிப்பிட்ட வட்டார இலக்கியங்கள் அதன் எழுத்தின் வழியாக அந்நிலத்திற்கும் மக்களுக்குமான தொடர்பை வெளிப்படுத்துகின்றன. இலக்கியத்திற்கும் அதன் நிலவியலுக்கும் உள்ள தொடர்பு ஆழமானது என்பதால் இலக்கியத்தில் காணப்படும் நிகழ்வுகளைப் படிக்கும் பொழுது அம்மக்களின் உணர்வுகளையும்

அனுபவங்களையும் நாம் அறிந்துகொள்ளமுடிகிறது (Pocock,P.93). அத்தகைய இலக்கியங்கள் புவியியல் ஆய்வுக்கு முதன்மையானதாக உள்ளன.நாம் சென்று காணமுடியாத இடங்களின் நிலவியலை இலக்கியங்கள் வழங்குகின்றன. மேலும் அவைகள் அவ்விடத்தின் மனிதர்கள் குறித்தும், இடத்துக்கும் மனிதனுக்கும் இடையேயான உறவு நிலை குறித்தும் மற்றும் அதற்கான காரணங்களையும் விவரிக்கின்றன. போக்காக் கூற்றுப்படி புவியியலாளர்கள் ஆய்வின் மிகவும் ஆர்வமூட்டும் பகுதி என்பது மனிதன் மற்றும் சுற்றுச்சூழல் உறவினுடைய பிணைப்பின் வலிமையைக் குறிப்பதாகும். அதற்கு இலக்கியங்கள் பரந்த களஞ்சியமாகத் திகழ்கின்றன (Pocock,P.90) என்பதால் இலக்கியங்களில் விவரிக்கப்பட்டுள்ள பண்பாட்டு நிலவெளிகளைக் கொண்டு, அன்றைய காலத்து இயற்கை மற்றும் பண்பாட்டுக் கூறுகளை அடையாளப்படுத்த முடிகின்றது.

செவ்வியல் தமிழ் இலக்கியமான ‘பரிபாடல்’ தமிழ்நாட்டின் மாவட்டங்களில் ஒன்றான மதுரையின் தொன்மையான நிலவியல் கூறுகளைப் பதிவு செய்துள்ளது.மேலே கூறப்பட்ட கருதுக்களின் அடிப்படையில் இலக்கியங்கள் நிலவியல் ஆய்வுக்கு இன்றியமையாதது என்பதால் இங்கு பரிபாடல் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட வெளிகளான(space) மலைகள், ஆறுகள், நகரங்கள் மற்றும் இடங்கள் (Mokapela,2024) என்பன பரிபாடலில் மதுரை (நகரம்) வையை (ஆறு) திருமாலிருஞ்சோலை (மலை) திருப்பரங்குன்றம் (குன்று) போன்ற நிலவெளிகளாக வெளிப்படுகின்றன. எழுதப்பட்ட இலக்கியத்தில் குறிப்பிடப்படும் இத்தகைய இடங்களை தாக்கர் என்பவர் (2017) உரைவெளி (Textual spaces) என்று குறிப்பிடுகிறார் (Mokapela,2024). பரிபாடலின் உரைவெளி மதுரையின் சமூக வெளிக்கும் அதன் இடம் சார்ந்த பண்பாட்டு வடிவங்களுக்கும் உள்ள தொடர்பை வெளிப்படுத்துவதால் பரிபாடல் ஓர் நிலவியல் இலக்கியமாகத் தன்னை நிலை நிறுத்திக் கொள்கிறது.

தமிழர்களின் தொன்மையான செவ்வியல் இலக்கியமாகச் சங்க இலக்கியங்கள் விளங்குகின்றன. அவற்றுள் ஒன்றாக இருக்கும் பரிபாடல் எழுபது பாடல்களைக் கொண்ட நூலாகும். ஆனால் “தற்போது இருபத்து இரண்டு பாடல்கள் மட்டுமே கிடைக்கின்றன. திருமாலுக்கு ஆறு, முருகனுக்கு எட்டு, வையைக்கு எட்டு என்று இருபத்திரண்டு பாடல்களுடன் பழைய உரைகளில் மேற்கோளாகக் காட்டப்பட்ட இரண்டு பாடல்களும் கிடைக்கின்றன” (பரிபாடல் சொற்பொழிவுகள், பக்.10,11). இவ்வாறு இன்று கிடைக்கும் பரிபாடலின் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டாகும் என்று சாரங்கபாணி பரிபாடல் திறன் எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார் (பரிபாடல் திறன்,ப.26). பரிபாடலின் முருகனுக்குரிய எட்டு பாடல்கள் மட்டும் இப்பகுதியின் ஆய்வுக்குரியதாகும். இப்பரிபாடலில் குறிப்பிடப்படும் நிலவியல் அமைப்பு, தென் தமிழ்நாட்டில் உள்ள மதுரை நகரினை அடிப்படையாகக் கொண்டதாகும். ஏனெனில் மதுரையின் நிலவியல் அடையாளமாகக் குறிப்பிடப்படும் திருப்பரங்குன்றம், திருமாலிருஞ்சோலை மற்றும் வையை ஆகிய நிலவெளிகள் இன்றும் மதுரை

பகுதியில் காணப்படுகின்றன. எனவே பரிபாடல் குறிப்பிடும் நிலப்பகுதி தமிழ்நாட்டின் நவீன கால மதுரையைச் சுற்றியுள்ள நிலவெளிகள் என்பதை உறுதிப்படுத்த முடிகிறது. இக்கட்டுரை திருப்பரங்குன்றத்தின் பண்பாட்டு நிலவெளி மற்றும் அதற்கும் அப்பகுதி மக்களுக்கும் இடையிலான உணர்வுபூர்வமான இணைப்பையும், அந்நிலவெளி முருகனுக்குரிய வழிபாட்டுத்தளமாக மாற்றப்பட்டதையும், அதன் அடிப்படையில் அந்நிலவெளியை தங்கள் வாழ்க்கையுடன் இணைத்துக் கொண்ட நிலையையும் பரிபாடல் வழி ஆராய்கிறது.

திருப்பரங்குன்றம் – இயற்கை மற்றும் பண்பாடு வடிவமைத்த நிலவெளி :

சங்ககாலம் முதல் 21 ஆம் நூற்றாண்டு வரை மதுரையின் பண்பாட்டு நிகழ்விடமாகத் திருப்பரங்குன்றம் காணப்படுகிறது. அது “இன்றுள்ள மதுரைக்கு தென்மேற்கில் ஐந்துகல் (8 கி. மீ) தொலைவில் உள்ளது” (பத்துப்பாட்டு ஆராய்ச்சி,ப.198). ஆனால் சங்க காலத்தில் மதுரை நகருக்கு மேற்கில் திருப்பரங்குன்றம் அமைந்திருந்தது (அணிநடை எருமை,ப.137, பத்துப்பாட்டு ஆராய்ச்சி, ப.200). இதற்கு சங்க இலக்கியங்கள் பின்வருமாறு சான்றாக அமைகின்றன.

“மாடம் மலி மறுகின் கூடற் குடவயின்

-- குன்று அமர்ந்து உறைதலும் உரியன்” (திருமுருகாற்றுப்படை, 70,76)

“கொடி நுடங்கு மறுகிற் கூடற்குடா அது

பல்பொறி மஞ்ஞை வெல்கொடி யுயரிய

ஒடியா விழவின் நெடியோன் குன்றம்” (அகநானூறு,149:14-16)

மனிதர்கள் உருவாக்கிய நகரமைப்புகள் பல்வேறு காலச் சூழலுக்கு ஏற்ப வளர்ச்சியடைந்து ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு நகரும் தன்மைக் கொண்டது என்பதால், அதன் காரணமாக மதுரை நகரமும் தன் வளர்ச்சிக்கு ஏற்ப இடம் மாறியுள்ளது (அணிநடை எருமை,ப.137) இலக்கியங்கள் சமூகங்களின் குறிப்பிட்ட புவியியல் இடங்கள் பற்றிய கருத்துக்களில் தாக்கத்தை ஏற்படுத்துவதால் (Mokapela,2024) அதன் வளர்ச்சி மற்றும் மாற்றங்களை மதிப்பிட முடிகின்றது. திருப்பரங்குன்றத்தில் காணப்படும் தமிழ்-பிராமி கல்வெட்டுகள் மற்றும் சமணத் துறவியர் வாழ்ந்த இயற்கையான குகைத்தளம் (மாமதுரை,ப.66) ஆகியவை அந்நிலவெளியின் காலம் மற்றும் பண்பாட்டு வளர்ச்சியைத் தெரிவிக்கின்றன. இக்கல்வெட்டுகளில் ஒன்றின் காலம் கி. மு 2-1 ஆம் நூற்றாண்டு, மற்றொன்று கி. பி 1-2 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது (மதுரை மாவட்டத் தொல்லியல் கையேடு,ப.98) எனும் ஆய்வுமுடிவு, அப்பண்பாட்டு நிலவெளியின் இரண்டாயிரம் ஆண்டுகாலத் தொன்மைக்கும், பரிபாடலின் திருப்பரங்குன்றத்து நிலவியலின் உண்மைத்தன்மைக்கும் சான்றாகத் திகழ்கின்றது. குறிப்பிட்ட நிலவெளியின் இயற்கைச்சூழல் பண்பாடு தோன்றி வளர்வதற்கு காரணமாக அமைகின்றன.அவ்வகையில் திருப்பரங்குன்றத்துக்கும் மக்களுக்குமான

தொடர்புக்கு அதன் இயற்கைக் கூறுகள் துணைநின்றுள்ளன. அவற்றைப் பின்வரும் பகுதி விவரிக்கின்றது:

தட்பவெப்ப நிலை என்பது ஒரு குறிப்பிட்ட நிலத்தின் பருவக்காற்று மற்றும் மழைப்பொழிவின் அளவைக் குறிப்பிடுவதாகும். அவ்வகையில் திருப்பரங்குன்றம் இயற்கைச் சூழலுடன் காணப்படுவதற்கு அங்கு பெய்த மழைப்பொழிவின் அளவு காரணமாக இருந்துள்ளது. அக்குன்றின் மழைப்பொழிவைப் பின்வரும் பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன.

“மணிமழை தலைஇயென, மாவேனில் கார்ஏற்றுத்

தணிமழை தலையின்று தண் பரங் குன்று” (பரிபாடல், 9:10,11)

“பவழத் தன்ன செம்பூத் தாஅய்க்

கார்மலிந் தன்றுநின் குன்று” (பரிபாடல், 14:16,17)

“கார்மலி கதழ்பெயல் தலைஇ ஏற்ற

நீர்மலி நினைசுனை பூமலர்ந் தனவே” (பரிபாடல், 14:1,2)

திருப்பரங்குன்றத்தில் மழைக்காலம் அல்லாத கோடை காலத்திலும் கார்காலத்தைப் போன்று மழை பெய்துள்ளது. இதனை, “நின்குன்று கார்ப்பருவம் அல்லாத வேனிற்பருவத்தும் முகில் மழையை மிகப் பெய்தலானே கார்ப்பருவத்தின் தன்மை பெற்றது” (பரிபாடல்,ப.239) எனும் சோமசுந்தரனாரின் உரைக்கருத்து விவரிக்கின்றது. மேலும் இன்றைய காலத்தில் மேகவெடிப்பு என்று கூறப்படும் விரைவு மழையை ஒத்த நிகழ்வாக திருப்பரங்குன்றத்தில் “மிக விரைந்து மழைபெய்தலை மேகம் மேற்கொண்டது” (பரிபாடல்,ப.213) என்று சாரங்கபாணி தமது உரையில் கூறியுள்ளார். இது மழையின் காரணமாக நீர் வளம் மிக்க குன்றாகத் திருப்பரங்குன்றம் காட்சியளித்துள்ளதைக் காட்டுகிறது. அதனால் அங்கு இயற்கையாய் அமைந்த சுனை வற்றாத நீர்நிலையாகக் காணப்பட்டுள்ளது. இச்சுனை மக்களின் காதல் வாழ்க்கையை வளர்க்கும் இடமாக இருந்துள்ளது. இத்தகைய மழையும் சுனையும் இணைந்து மக்களுக்கும் திருப்பரங்குன்றத்திற்கும் இடையேயான பிணைப்பை வலுப்படுத்தும் காரணியாக அமைந்திருக்கின்றன .

படம் திருப்பரங்குன்றின் மலை மீது அமைந்துள்ள சுனையின் தற்காலப் புகைப்படம் (https://share.google/tG2rwMQRStSb4al8P)

நீர்நிலைகளைத் தொடர்ந்து குறிப்பிட்ட நிலப்பகுதியின் இயற்கைச் சூழலுக்கு இன்றியமையாதது தாவரங்களும் உயிரினங்களுமாகும். அவ்வகையில் திருப்பரங்குன்றத்திலும் பல்வேறு வகையான தாவரங்கள் மற்றும் உயிரினங்கள் காணப்பட்டுள்ளன. திருப்பரங்குன்றச் சூழலில் வளர்ந்த தாவரங்களானக் கொன்றை, காந்தள் (செங்காந்தள், வெண்காந்தள்), கடம்பு (பரிபாடல்,14:3) வேங்கை, தோன்றி (ஒரு வகை கொடி), கொறுக்கச்சி (பஞ்சாய்க்கோரை,எருவை -பரிபாடல் (சோமசுந்தரனார்),ப.311), நறவம் ,கோங்கம், பச்சிலையாகிய இளங்கொழுந்து, ஆம்பல்,மூங்கில் (பரிபாடல்,14:6) ஏழிலைப்பாலை போன்ற மரவகைகளும் செடிகளும் அங்கு காணப்பட்டதைப் பின்வரும் பரிபாடல்கள் குறிப்பிடுகின்றன:

“கொன்றை கொடிஇணர் ஊழ்ப்பக் கொடிமலர்

மன்றல மலர மலர்காந்தள் வாய்நாற” (பரிபாடல், 8:24,25)

“பசும்பிடி இளமுகிழ் நெகிழ்ந்தவாய் ஆம்பல்,

கைபோற் பூத்த கமழ்குலைக் காந்தள்,

எருவை, நறுந்தோடு எரிஇணர் வேங்கை,

உருவமிகு தோன்றி, ஊழிணர் நறவம்,

பருவமில் கோங்கம் பகைமலர் இலவம்” (பரிபாடல், 19:75-79)

இவற்றில் ஏழிலை பாலை என்பது பாலை நிலத்து மரவகை ஆகும். “நீண்ட இலையை உடைய நீளிலைப் பாலையின் இலையின் நீட்சியானது கோடைகால வெம்மையைத் தாங்குவதற்கு ஏற்ப நீரைச் சேமித்து வைப்பதற்கு ஏற்ற அமைப்புடையது”

(பரிபாடல்,ப.572) என்று சுப்பிரமணியம் மற்றும் பலர் இணைந்து தங்கள் கருத்தைத் தெரிவித்துள்ளனர் என்பதால் பாலை நிலத்து மரவகை திருப்பரங்குன்றம் சூழலிலும் வளர்ந்துள்ளது தெளிவாகிறது. நறவம் என்பது “நறுமணமுள்ள புதர்க்கொடி வகையாகும். இதில் மலர்கள் கொத்தாகப் பூக்கும். இம்மலரின் நறுமணம் நெடுந்தூரம் பரவும். இதில் தாது மிகுந்திருப்பதால் வண்டுகள் மொய்த்துக் காணப்படும் தன்மைக்கொண்டது” (சங்க இலக்கியத் தாவரங்கள்,ப.77) என்பதால் அக்குன்றின் நறுமணச் செடியைத் தெரிந்துகொள்ள முடிகிறது.

“கோங்கு எனும் மரவகை மலைபாங்கில் வளரக்கூடியது. அதில் மஞ்சள்நிறமான பால்வடியும் தன்மை கொண்டது” (சங்க இலக்கியத் தாவரங்கள்,ப.73) என்பதால் அதன் தன்மை வெளிப்படுகிறது. மேலும் அது அனைத்து பருவங்களிலும் மலரக்கூடியது என்பதால் அதனை ‘காலங்குறியாது பூக்கும் கோங்கு’ என்று பரிமேலழகர் தம் உரையில் குறிப்பிட்டுள்ளார் (பரிபாடல், ப.143). கோரைப்புல் வகையைச் சேர்ந்த எருவை என்பது பஞ்சாய்க்கோரை, கொறுக்கச்சி என்றும் அழைக்கப்படுகின்றது என்று சுப்பிரமணியம் மற்றும் பலர் தமது உரையில் குறிப்பிட்டுள்ளனர் (பரிபாடல்,ப.509). இவ்வாறு பலவகையான தாவரங்கள் வளர்வதற்கு ஏற்ற நிலவெளியாகத் திருப்பரங்குன்றம் திகழ்ந்துள்ளது.

திருப்பரங்குன்றத்தின் முதன்மை உயிரினமாகக் குரங்குகள் காணப்பட்டுள்ளன. “தமிழ்நாட்டில் எங்கும் எளிதாகக் காணப்படும் குரங்கு, மக்களிடம் பெரிதும் பழகும் ஒருவகை குரங்கு” (சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம்,ப.2) எனும் கருத்தால் திருப்பரங்குன்றத்தில் வாழ்ந்த குரங்குகளும் அவ்வகையைச் சார்ந்ததாக இருந்துள்ளது. மேலும் கருமுகக்குரங்கும் அங்கு வாழ்ந்துள்ளது. அச்செய்தியை,

“குரங்க ருந்துபண் ணியம்கொடுப் போரும்

கரும்பு கருமுகக் கணக்குஅளிப் போரும்

தெய்வப் பிரமம் செய்கு வோரும்” (பரிபாடல்,19:38-40)

எனும் பாடல் அடிகள் வெளிப்படுத்துகின்றன. மேலும் அக்குரங்குகளுக்குத் திண்பண்டங்களும், கரும்பும் உணவாகத் தந்துள்ளனர். இதனால் மக்களிடம் பழகும் குணம் கொண்ட குரங்கு இனம் திருப்பரங்குன்றில் இருந்துள்ளது தெளிவாகிறது. எனவே இது குன்றின் மீதும் அங்கிருந்த உயிரினங்கள் மீதும் மக்களுக்கு இருந்த அன்பினைக் காட்டுகிறது. அக்காலத்தில் வண்டு, தும்பி,மிஞிறு ஆகிய வண்டினங்கள் காணப்பட்டதாக சோமசுந்தரனார் குறிப்பிடுகிறார் (பரிபாடல்,ப.121). அவை பரிபாடலில் “தாது ஊதும் வண்டு” என்று குறிப்பிடப்படுகின்றன. தாது ஊதுவது என்பது “தேனைக் கவருவது, மகரந்ததைக் கவர்வது ஆகியவற்றைக் குறிக்கும்” (சங்க நூல்களில் சில உயிரினங்கள், ப. 131) என்பதால் வண்டினங்களின் இன்றியமையாமையைத் தெரிந்து கொள்ளலாம். வண்டினங்கள் மற்றும் தாது ஊதும் வண்டு குறித்தப் பரிபாடல் வரிகள் பின்வருமாறு:

“தண்நறுங் கடம்பின் கமழ்தாது ஊதும்

வண்ணவண்டு இமிர்குரல் பண்ணைபோன் றனவே” (பரிபாடல்,14:3,4)

“ஏழ்புழை, ஐம்புழை, யாழிசைகேழ்த் தன்னஇனம்

வீழ்தும்பி வண்டொடு மிஞிறுஆர்ப்பச் சுனைமலர” (பரிபாடல், 8:22,23)

மேலே குறிக்கப்பட்டுள்ள உயிரினங்களுடன், கோழி (பரிபாடல், 8: 19), மயில் (பரிபாடல், 14: 8), கிளி (பரிபாடல ,9:42), குருவி (பரிபாடல்,18: 47) குயில் (பரிபாடல், 9:65) போன்ற பறவை இனங்களும் திருப்பரங்குன்றத்தின் மலையில் வாழ்ந்துள்ளன. இவைகள் அக்குன்றின் மானுட அன்புக்கு உவமையாகி இருக்கின்றன என்பதை சாரங்கபாணி விளக்கியுள்ளார் (பரிபாடல், பக்.149,150,246). இத்தகைய இயற்கைச் சூழலமைப்போடு செழித்துக் காணப்பட்ட திருப்பரங்குன்றத்துடன் மக்கள் இணைந்து அவ்விடம் சார்ந்த பண்பாட்டினை உருவாக்கியதால் அது அன்புக்கு உரிய இடமாகத் திகழ்ந்துள்ளது. ஒரு இயறக்கையான இடம் பண்பாட்டின் காரணமாகக் கட்டமைக்கப்படும் பொழுது அது பண்பாட்டு நிலவெளியாகத் தோன்றும் (Arora, 2006) எனும் கருத்துக்கு ஏற்ப, திருப்பரங்குன்றத்தின் இயற்கை நிலவெளியுடன் மக்கள் வினைபுரிந்து அதனைப் பண்பாட்டு நிலவெளியாக வடிவமைத்துள்ளனர். இதுபோன்று பரிபாடல் இலக்கியம் விவரித்துள்ள மக்களுக்கும் நிலத்துக்கும் இடையேயுள்ள இணைபிரியாதத் தொடர்புக்கான நிகழ்வுகளைப் பின்வரும் பகுதி விளக்குகின்றது.

திருப்பரங்குன்றத்துக்கும் மக்களுக்கும் இடையேயான உணர்வு வெளிப்பாடு :

திருப்பரங்குன்றத்துடன் மக்கள் பிணைப்பை ஏற்படுத்திக்கொள்ள, அதன் இயற்கைச் சூழல் அடிப்படைக் காரணியாக இருந்துள்ளது. குறிப்பாக அக்குன்றின் ‘சுனை’ மக்களோடு நெருக்கம் கொண்டதாகக் காணப்பட்டுள்ளது. பரிபாடல் விவரிக்கும் ‘சுனை ஆடல்’ எனும் நிகழ்வு ஆண் பெண் காதலையும், கணவன் மனைவி அன்பையும் வெளிப்படுத்துகின்றது.மேலும், “இயற்கைப் புணர்ச்சியின் குறியீடாகச் சுனை காணப்படுகிறது ” (முருகேசன்,ப.7) எனும் கருத்து அதன் முக்கியத்துவத்தைக் காட்டுகிறது. அதில் ஒரு நிகழ்வு: சுனையில் நீராடிய மனைவி அதன் கரையில் நின்ற தன் கணவனிடம், தான் பற்றிக்கொண்டு மேல்வர மூங்கில் குச்சியைக் கேட்க, அவன் சாயநீர் வட்டினை எறிந்துள்ளான். குச்சி கிடைக்காத மனைவி நீரில் தத்தளிக்க, அவளது அந்நிலை கண்டு கணவன் மகிழ்ந்து, பின் சுனையில் குதித்து, அவளைத் தழுவிக் கொள்ளும் காட்சி அம்மக்களின் அகவாழ்வினை எடுத்துக்காட்டுகிறது (பரிபாடல்,ப.283) என்பது சாரங்கபாணியின் உரைக் கருத்தாகும் . அந்நிகழ்வை விவரிக்கும் வரிகள்:

“தாழ்நீர் இமிழ்சுனை நாப்பண் குளித்தவள்

மீநீர் நிவந்த விறல்இழை கேள்வனை

வேய்நீர் அழுந்துதன் கையின் விடுகெனப்

பூநீர்பெய வட்டம் எறியப் புனைபெறாது

அருநிலை நீரின் அவன்துயர் கண்டு

கொழுநன் மகிழ்தூங்கிக் கொய்பூம் புனல்வீழ்ந்து

தழுவும் தகைவகைத்துத் தண்பரங்குன்று" (பரிபாடல் , 21:39-45)

மற்றொரு நிகழ்வாக சுனையில் மகளிரும் அவர்களுடன் ஒத்த அன்பு கொண்ட ஆடவரும் ஒருசேர மகிழ்ச்சியாக நீராடியுள்ளனர். அவற்றோடு தன் தலைவனை நினைத்து வருந்திய தலைவிக்குச் சுனையில் நீராடியதால், களவினால் ஏற்பட்ட பிரிவுத் துயர் நீங்கியுள்ளது (பரிபாடல், 8:109-123). இத்தகைய சுனை நீராடல் காட்சிகள் அம்மக்களின் காதல் இன்பத்தைப் பெருக்குவதாகவும், துன்பத்தைப் போக்குவதாகவும் இருந்துள்ளன. இந்நிகழ்வுகள் சுனையோடு மக்களுக்கு இருந்த நெருக்கத்தை வெளிப்படுத்துகின்றன. மேலும் திருப்பரங்குன்றமானது மக்களுக்குக் களவு மற்றும் கற்பு புணர்ச்சியை அளிக்கும் இடமாக விளங்கியுள்ளது. அதனை அக்குன்றின் சிறப்பாகவும் இயல்பாகவும் பரிபாடல் குறிப்பிடுகின்றது. இதனை ,

"ஆராக் காமம் ஆர்பொழிற் பாயல்

வரையகத்து இயைக்கும் வரையா நுகர்ச்சி,

முடியா நுகர்ச்சி முற்றாக் காதல்

அடியோர் மைந்தர் அகலத்து அகலா

அலர்ஞெமல் மகன்றில் நன்னர்ப் புணர்ச்சி

புலரா மகிழமறப்பு அறியாது நல்கும்

சிறப்பிற்பே தண்பரங்குன்று" (பரிபாடல், 8:40-46)

எனும் பாடல் விளக்குகிறது.குன்றில் இருந்த தலைவன் தன் தலைவியைப் போன்றிருந்த மயிலைப் பார்க்கின்றான். அதைக் கவனித்த காதலி அவன் வேறொருத்தியைக் காண்பதாக நினைத்து ஊடல் கொள்கிறாள். பின் அவனிடம் ஒளிவு மறைவு இன்றி நடந்ததைக் கூறுமாறு கேட்க, அவன் மயிலைக் கண்டேன் என்று தெளிவுபடுத்தினான்.இதனால் அவர்களின் ஊடல் நீங்கியது என்பது சாரங்கபாணியின் உரைச்சுருக்கமாகும் (பரிபாடல்,ப.246). அதுபோல் அங்கு நடைபெற்ற ஆடல் நிகழ்வினைப் பெண்கள் காண்கின்றனர். அந்நிகழ்வில் ஆடலில் சிறந்த மகளிர் ஆடும்பொழுது, தம் கணவர் அப்பெண்களைப் பார்க்காமல், தன் மனைவிதான் சிறந்தவள் என தங்களை நினைத்துக்கொள்வர் என்று நினைத்து அப்பெண்கள் அவர்களை அழகுபடுத்திக் கொள்கின்றனர். இக்காட்சி பெண்களின் காதல் மனநிலையைக் காட்டுகிறது (பரிபாடல் , 21:18-29). மேலும், "வேள் என்பதற்கு வேட்கையை உண்டாக்குபவன் என்று பொருள்" (சசிகலா,ப.95) உள்ளதால் செவ்வேள் உரையும் இடமான திருப்பரங்குன்றம் அந்நிலத்திலுள்ள மக்களுக்கு மகிழ்ச்சியை வழங்கும் தன்மையினைக் கொண்டிருந்தது புலனாகிறது. எனவே, மதுரை மக்களின் மன உணர்வுகளுக்குத் துணைநின்ற சுனை மற்றும் திருப்பரங்குன்றம் ஆகியவற்றை இமயமலையோடு ஒப்பிட்டும், அதனைச் சிறப்பித்தும் " பரங்குன்று இமயக் குன்றம்

நிகர்க்கும்” (பரிபாடல்,8:11) என்று ஆசிரியர் நல்லந்துவனார் பரிபாடலில் பாடியுள்ளார். இது குன்றின் மீது மக்கள் கொண்டிருந்த பெருமதிப்பினைத் தெரிவிக்கின்றது. ஆகவே, காதலும் அதனை வளர்க்கும் இடமும் தமிழர் வாழ்வோடு ஒன்றிணைந்தது என்பதற்குத் திருப்பரங்குன்றம் சான்றாக இருந்துள்ளது.

குன்றும் தமிழர் மரபும் :

திருப்பரங்குன்றத்தின் சிறப்பான காட்சிக்கு அங்கிருந்த இயற்கைக் கூறுகளும்,மனிதனுடைய அன்பும் காரணமாயிருக்கின்றன. ஏனெனில் இயற்கையும் (land) காதலும் தமிழர்களின் வாழ்வோடு ஒன்றிணைந்தகூறாகும். மலை சார்ந்த பகுதி தமிழ் மக்களுக்குப் பிடித்தமான பகுதியாகும் (FRANCOIS,2018). எப்பொழுதும் காதலர்கள் சந்திக்கும் இடமாக மலை இருப்பது (Subrahmanian,ப.366) தமிழர் மரபுகளுள் ஒன்றாகும். அம்மரபுக்கு ஏற்ற இடமாகத் திருப்பரங்குன்றம் விளங்கியதால் தமிழ் மக்கள் அந்நிலவெளியோடு உள்ளார்ந்த தொடர்பினை வளர்த்துக் கொண்டுள்ளனர். அன்றைய ஆண் பெண் உறவின் ஆழம் மற்றும் அவ்வுறவில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்த்தல் போனறவற்றிற்கான சூழலமைப்பு திருப்பரங்குன்றத்தில் இருந்துள்ளது. அதனால் மக்கள் அந்நிலத்தை வாழ்த்தி வழிபட்டுள்ளனர். அத்தகைய ஆண் பெண் உறவு நிலை சிலவற்றைப் பரிபாடல் குறிப்பிட்டுள்ளது. இளம்பெண்கள் தங்களுக்கு நல்ல கணவன் அமைய யானை வழிபாடு நடத்தியுள்ளனர். யானைக்கு உணவளித்துவிட்டு மீதமான உணவை அப்பெண்கள் உண்டால் அவர்கள் வழிபாடு நிறைவேறும் என்பது அக்கால நம்பிக்கையாக இருந்துள்ளது. இதனை “யானையின் கவழமிச்சிலைச் சிறப்போடு உண்ணாவிட்டால் பலமணமும் நிலைபெற்ற பிணணிய கூந்தலை உடைய மகளிர் தம் காதலரின் முறுவலோடு கூடிய தலையளியை எய்தார். கண்ணிமை கனிந்த காலத்தார் குறைவொன்றும் இல்லாத மைந்தர் தோள்களைக் கூடார் ” (பரிபாடல்,ப.258) எனும் சாரங்கபாணியின் உரை தெளிவுபடுத்துகிறது. பொருள் ஈட்டச் சென்ற ஆடவர்கள் நீண்ட நாட்கள் அந்த இடத்தில் தங்காமல் விரைந்து வர வேண்டும் என்றும்,அவ்வாறு வந்தபின் தங்களை நீங்காது இருக்க வேண்டும் என்றும் மகளிர் அக்குன்றில் வருத்தத்துடன் பேசிக்கொண்டு வழிபட்டுள்ளனர். அவர்களின் வழிபாடு நிறைவேறிய பின் முருகனுக்கு விழா எடுத்தும் ,மதுரை மக்களுக்கு விருந்து அளித்து விருந்தோம்பல் செய்தும் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர் என்பது சாரங்கபாணியின் உரைச்சுருக்கமாகும் (பரிபாடல்,ப.239). அதனை விவரிக்கும் பரிபாடல் வரிகள் :

“தெய்வ விழவும் திருந்து விருந்தயர்வும்

அவ்வெள் மருவி அணிபரங் குன்றிற்கும்

தொய்யா விழுச்சீர் வளங்கெழு வையைக்கும்

கொய்உளை மான்தேர்க் கொடித்தேரான் கூடற்கும்

கைஊழ் தடுமாற்றம் நன்று” (பரிபாடல், 17:42-46)

திருப்பரங்குன்றத்தின் இத்தகைய காட்சிகள் தமிழர்களின் களவு கற்பு, புணர்ச்சியைக் காட்சிப்படுத்துகின்றன.மக்களின் மன உணர்வுக்கும் நிலவெளிக்கும் இடையிலான தொடர்பு முறைப்படுத்தப்பட்டது (Subrahmanian,ப.366) என்பதால் நிலம், தமிழ்கர்ளோடு நெருங்கிய தொடர்புகொண்டுள்ளது.எனவே அவர்களின் வாழ்க்கை நிகழ்வுகள் நிலத்துடன் இணைந்திருக்கின்றன. பண்டைய தமிழர் வாழ்க்கை முறைகளில்ஒன்றான களவுப் புணர்ச்சி மலை நிலமான குறிஞ்சிக்குரியது (Pal Thamburaj,2016, Subrahmanian,ப.366) என்பதால் திருப்பரங்குன்றம் அகவாழ்வின் அடையாளமாகி, தமிழ் மக்கள் அதோடு பிணைப்பை ஏற்படுத்திக் கொள்வதற்குக் கரணமாகியிருக்கின்றது.

பொதுவாகப் பண்டைத் தமிழ் மரபுப்படி ஐவகை நிலத்தன்மைக்கு ஏற்ப தெய்வங்கள் தோற்றுவிக்கப்பட்டு வணங்கப்பட்டுள்ளன. அவற்றுள், பழந்தமிழகத்தில் முருகன் குறிஞ்சி நிலத்தின் தெய்வமாக வழிபடப்படுள்ளான் (கருணாகரன்,ப.41, சங்கர்,ப.2). எனவே, மலை சார்ந்த குறிஞ்சிப் பகுதியான திருப்பரங்குன்றத்தை (பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, ப.213) மலை நிலத்துக் கடவுளாகத் தமிழ் மக்களால் வழிபடப்பட்ட, குன்றத்தின் கடவுள் என்று அழைக்கபட்ட (நில அமைப்பும் தமிழ்க் கவிதையும்,ப.63, தமிழ்நாட்டு வரலாறு,ப.2) மற்றும் காதலை எடுத்துக்காட்டக்கூடிய கடவுளான முருகனுக்கு (FRANCOIS, 2018) உரிய உறைவிடமாகத் தமிழ் மக்கள் மாற்றியமைத்துள்ளனர். அதனால் அவ்வியற்கை நிலவெளியும் தமிழ் மக்களின் வாழ்க்கை முறையும் இணைந்து திருப்பரங்குன்றம் பண்பாட்டு நிலவெளியாக புதுத்தோற்றத்தைப் பெற்றுள்ளது. அதில் முதன்மையானது முருகனுடைய கோயிலாகும். அதற்குக் காரணம், இயற்கையின் மீது பண்டைய தமிழர்கள் கொண்டிருந்த அன்பு, அழகின் உருவகமான முருகன் என்று பெயர்பெற்றிருந்தது (Padmanabhan,ப.23).அதனால் அக்குன்றுக்கு உரிய தெய்வமாக முருகனை மக்கள் வழிபட்டுள்ளனர். அத்தகைய“முருகன் தமிழ் பண்பாட்டில் மிகவும் அடிப்படையான மதமரபின்படி மலைகளில் சுற்றித்திரிவதை மிகவும் விரும்புவதாக நம்பப்படுகிறது” (Padmanabhan,ப.23) எனும் கருத்து நிலம் சார்ந்த தெய்வ வழிபாட்டைக் காட்டுகிறது. அதனால் தமிழ்க் கடவுளான மலை நிலத்து முருகனுக்கு அங்கு இயற்கையாய் அமைந்த பாறைகளுக்கு இடையே கோயில் அமைந்திருந்தது தமிழ் மரபுக்கு உரியதாகும். அங்கு அக்கோயில் இருந்ததைக் குறிப்பிடும் பரிபாடல் வரிகள்:

“ஒண்சுடர் ஓடைக் களிறுஏய்க்கும் நின்குன்றத்து

எழுதுஎழில் அம்பலம் காமவேள் அம்பின்

தொழில்வீற் றிருந்த நகர்” (பரிபாடல், 18:27-29)

அக்கோயில் சார்ந்து பல ஓவிய மண்டபங்களும் ஏற்படுத்தப்பட்டிருந்தன. அங்கு வரையப்பட்டிருந்த ஓவியங்களைப் பார்த்துக் கொண்டிருந்த பெண் ஒருத்தி அதன் வரலாற்றை தன் கணவனிடம் கேட்கிறாள். அதற்கு கணவன், இது இந்திரன், இது அகலிகை,என்று ஓவியங்களின் வரலாற்றை விளக்கிக்கூறுகிறான் என்று

சாரங்கபாணி விவரிக்கின்றார் (பரிபாடல்,ப.257). இந்நிகழ்வு அவ்விடம் சார்ந்த அகவாழ்வை வெளிப்படுத்துகிறது. இவ்வாறு கோயில் சார்ந்த பண்பாட்டு நிகழ்வுகளிலும் தமிழ்க் காதல் வெளிப்படுவது திருப்பரங்குன்றத்தை அன்பின் அடையாளமாகக் காட்சிப்படுத்தியுள்ளது. தமிழ் நிலவெளிகளில் மனிதனுடைய காதல் அனுபவங்கள் வெளிப்படும் (Craigie,ப.171)எனும் கருத்துக்கு ஏற்ப திருப்பரங்குன்றத்தில் (குறிஞ்சி) அத்தகையக் காட்சிகள் வெளிப்படுவது இயல்பான ஒன்றாகும்.

வழிபாடும் இட உணர்வும்:

இட உணர்வு எனும் சொல்லானது இடங்களுடன் மக்களுக்கு உள்ள இணைப்பை வலியுறுத்துகிறது (Mokapela,2024). இடங்கள் அது சார்ந்த அடையாளங்களைக் கொண்டுள்ளன. அந்த இடங்கள் மீது மக்கள் கொண்டுள்ள மதிப்பு, அவர்களின் நடவடிக்கைகளில் வெளிப்படுகின்றன. அதுபோல் திருப்பரங்குன்றம் எனும் நிலவெளியைத் தமிழ் மக்கள் தங்கள் வாழ்க்கையுடன் இணைத்துக்கொண்டு அதனை மதிப்பு மிக்கதாகக் கருதியிருக்கின்றனர். அதனைப் பரிபாடலின் வரிகள் விவரிக்கின்றன. திருப்பரங்குன்றத்திற்கு உரிய முருகக் கடவுளிடம் மக்கள் தங்களுக்குத் தேவையானவற்றை வேண்டி வழிபடுகின்றனர். அந்த வழிபாடு அவர்களுக்கும் அந்நிலவெளிக்குமான தொடர்பை வெளிப்படுத்துகின்றது. பொதுவாக, "வழிபாடாவது வணக்கம் செலுத்துவது, நன்றி சொல்வது,தன் அச்சத்தைப் போக்க இறைவன் உதவுகிறான் என நம்புவது" (பெரியசாமி,ப.101) என்பதைக் குறிக்கிறது. அதுபோல் மதுரை மக்களின் வழிபாடானது திருப்பரங்குன்றத்தின் நலனுக்குரியதாகும் மற்றும் தமிழக்காதலில் ஏற்படும் பிரிவுத் துன்பத்தைப் நீக்குவதற்கும் உரியதாகும். வழிபாட்டில் முதன்மையானது அம்மக்கள் அவ்விடத்தை வாழ்த்துவதாகும். அக்குன்றினை வாழ்த்தும் பொழுது, "வானம் மழை பொழியாது, பொய்த்தாலும், நெறிப்படுத்திச் செல்லும் அருவி இடையறாது ஒழுகும் பெருஞ்செல்வம் உனக்கு என்றும் நிலை பெறுவதாகுக" என்பது சாரங்கபாணியின் உரைக்கருத்தாகும் (பரிபாடல்,ப.139). இவ்வாறு வாழ்த்துவது, அக்குன்று இயற்கை வளத்துடன் இருப்பதற்கு நீர் இன்றியமையாதது என்பதுடன் திருப்பரங்குன்றின் மீது அம்மக்கள் கொண்டிருந்த பெருமதிப்பும் காரணமாயிருந்துள்ளது என்பது புலனாகிறது.அவ்வழிபாட்டுக்குரிய பரிபாடல் வரிகள் :

"உடம்புணர் காதலரும் அல்லாரும் கூடிக்

கடம்புஅமர் செல்வன் கடிநகர் பேண

மறுமிடத்து அண்ணற்கு மாசிலோள் தந்த,

தெறிநீர் அருவி அசும்புரு செல்வ !

மண்பரிய வானம் வறப்பினும், மன்னுகமா !

தண்பரங் குன்றம் நினக்கு " (பரிபாடல் , 8:125-130)

தங்களுக்கும் குன்றுக்குமான உறவு தொடர வேண்டும் என்பதற்காக இப்பிறப்பில் மட்டுமல்லாது மறுபிறப்பிலும் திருப்பரங்குன்றம் அடிவாரத்தில் தங்கி வாழ்வதற்கு அருள் தருமாறு முருகனிடம் கேட்கின்றனர். முருகன் திருப்பரங்குன்றத்தின் கடவுளாக இருக்கும்வரை அந்நிலவெளி பாதுகாக்கப்படும் என்பதால் அவர்கள் முருகனையும் வாழ்த்துகின்றனர். அவ்வாழ்த்தானது, எக்காலத்திலும் நாங்கள், எங்கள் உறவினர்களோடு வந்து கடம்ப மரத்தடியில் அமர்ந்த உன் (முருகன்) நல்ல நிலையினை வணங்கி வாழ்த்தும் நிலையைத் தருக (பரிபாடல்,19: 95-105) என கேட்கும் நிலையில் அமைந்திருந்தது. இங்கு குறிப்பிடப்பட்ட கடம்ப மரம் முருகனுக்கு உரியது என்பதால், அதனை வழிபாட்டு இடமாக மாற்றியிருந்தனர்.அம்மரம் இருந்த இடத்தைச் சந்தனம் கொண்டு தூய்மைச் செய்து, ஆட்டுக் கிடாயை அதில் கட்டி அவ்விடத்தைப் பலியிடும் இடமாக்கி வழிபட்டுள்ளனர் என்று சாரங்கபாணி தமது உரையில் கூறியுள்ளார் (பரிபாடல்,ப.237). இந்நிகழ்வு தொன்மையான மரவழிபாட்டினையும், அம்முறை அழியாமல் தொடர்ந்து பின்பற்றப்படுவதற்குத் திருப்பரங்குன்றம் நிலவெளி காரணமாக இருந்துள்ளதையும் பரிபாடல் எடுத்துக்காட்டியுள்ளது. அதுமட்டுமல்லாமல் மிகத்தொன்மைக் காலத்திலிருந்தே முருகன் வழிபாடு அக்குன்றில் நடைபெற்றுள்ளது.அதனை அம்மக்களின் வழிபாடு கோடிட்டுக்காட்டுகிறது. அவ்வழிபாடானது “நாங்கள் உன்னை விரும்பி நெருங்கி, அடுத்து அடுத்து வழிபாடு செய்வதன் பயனாகத் தொன்றுதொட்டு வரும் உனது புகழினும் பலவாக, மேலும் மேலும் வழிபாடுகள் அமைய அருள் புரிவாயாக” (பரிபாடல்,ப.214) என்று சாரங்கபாணி விவரித்துள்ளார் . இது தொன்மையான பண்பாட்டு நிலவெளியின் இருப்பையும் அதோடு மக்களுக்கு இருந்த பிரிக்க முடியாத உறவையும் அடையாளப்படுத்துகின்றது.

முருகனிடம் அவர்கள் வாழ்வதற்கு தேவையான பொன், பொருள் மற்றும் அதனால் வரும் இன்பம் ஆகியவற்றைக் கேட்காமல், முருகன் மீது அன்பு செலுத்துவதற்கு அருள் வேண்டும் என்று கேட்கின்றனர். இதுவும் அம்மக்கள் குன்று மற்றும் முருகனிடம் கொண்டிருந்த அன்பைக் எடுத்துக்காட்டுகிறது. இதனை

“பொருளும் பொன்னும் போகமும் அல்ல; நின்பால்

அருளும் அன்பும் அறனும் மூன்றும்

உருள்இணர்க் கடம்பின் ஒலிதா ரோய !” (பரிபாடல்,5:79-81)

எனும் பாடல் தெளிவுபடுத்துகிறது. எனவே நிலம் மற்றும் கடவுள் குறித்த இத்தகைய நிலைப்பாடு மக்களின் மன உணர்வை வெளிப்படுத்துகின்றது. ஒரு பண்பாட்டு நிலவெளியை, அது சார்ந்த மக்கள் அதை அன்புக்குரிய அடையாளமாக நிலை நிறுத்துவது, அந்நிலவெளியோடு அவர்களின் தொன்றுதொட்டு காணப்படும் இணைப்பின் வெளிப்பாடாகும். திருப்பரங்குன்றத்தோடு தமிழ் மக்கள் காலம் காலமாகத் தங்களை இணைத்துக் கொண்ட வரலாறு பரிபாடலில் முருக வழிபாட்டின் வழியாகக் கிடைக்கிறது.

மதுரை மக்களைத் திருப்பரங்குன்றத்து நிலவெளியோடு இணைக்கும் பாலமாக இருந்த வழிபாடு மற்றும் மானுட அன்பு ஆகிய இடஞ்சார்ந்த நிகழ்வு நடைபெறுவதற்கு, மதுரைக்கும் திருப்பரங்குன்றத்திற்கும் இடையிலான பெருவழி (சாலை) துணை நின்றுள்ளது. அவ்வழியின் தன்மையைப் பரிபாடல் எடுத்துக்கூறுகிறது. மக்கள் அவ்வழியை மணற்பரப்பி உருவாக்கியிருந்தனர். வழி நெடுகிலும் சோலைகள், நீர் நிறைந்த குளங்கள், பல்வேறு வகையான மரங்கள் மற்றும் பூக்கள் நிறைந்த பசுமையான இடமாகக் காணப்பட்டது. அவ்வழியைப் பயன்படுத்தி மக்கள் கூட்டம் கூட்டமாகத் திருப்பரங்குன்றம் சென்று வந்துள்ளனர். இக்காட்சிகக்குரிய பரிபாடல் வரிகள்:

“வளிபொரு சேண்சிமை வரையகத்தால்

தளிபெருகும் தண்சினைய

பொழில்கொளக் குறையா மலரக்,

குளிர்பொய்கை அளறுநிறைய

மருதநளி மணல்ஞெமர்ந்த

நனிமலர்ப் பெருவழி” (பரிபாடல், 8:90-95)

அவர்கள் அவ்வழியில் பயணிப்பதற்குக் குதிரை, யானை மற்றும் தேர் போன்ற வண்டிகளைப் பயன்படுத்தியிருக்கின்றனர். அவ்வண்டிகளை வரிசையாக ஒழுங்குபடுத்தி நிறுத்தி வைப்பதற்கான இடமும் திருப்பரங்குன்றத்தில் ஏற்படுத்தப்பட்டிருந்தது. இதனை “மதநீரால் வண்டுகள் தொடரும் கபோலத்தை உடைய யானைகளைச் சிலர் மலையடிவாரத்தில் உள்ள மரங்களில் கட்டினர்” என்று சாரங்கபாணி தமது உரையில் குறிப்பிட்டுள்ளார் (பரிபாடல்,ப.256). இது அம்மக்களின் பண்பட்ட வாழ்க்கை முறையை வெளிப்படுத்துகிறது. இத்தகையப் பண்பாட்டு நிலவெளியுடன் மக்கள் கொண்டிருந்த இடஉணர்வு, அதற்கான அவர்களின் மரபு மற்றும் அதுசார்ந்த வழிபாட்டு முறை போன்றவற்றைப் பரிபாடல் காலம் கடந்தும் பாதுகாத்து வைத்திருப்பதால் இன்று நாம் அவற்றை அடையாளம் காணமுடிகின்றது.

தொகுப்புரை:

மக்கள் தாங்கள் வாழும் இயற்கை நிலவெளியுடன் இணையும் பொழுது அது பண்பாட்டு நிலவெளியாக மாற்றமடைகின்றது. அதில் காணப்படும் பண்பாடு, அந்நிலம் சார்ந்த சமூகத்தின் மதிப்பு மற்றும் அடையாளத்தை வெளிப்படுத்துகின்றது. அதுபோல் திருப்பரங்குன்றத்து நிலவெளியானது பண்டைய தமிழ்ச் சமூகத்தின் உணர்வு சார்ந்த அடையாளமாக இருந்துள்ளது. அந்நிலவெளி தமிழர்களின் களவு மற்றும் கற்பு நிகழ்ச்சிக்குரிய இடமாக இருந்துள்ளது. தமிழர் மரபில் இடங்கள் மக்களின் உணர்வோடு தொடர்புபடுத்தப்பட்டிருந்தன.குறிஞ்சி எனும் மலைநிலமான திருப்பரங்குன்றம் காதலுக்குரியதாக இருந்துள்ளது. அன்றைய மதுரை மக்களின் காதல் உறவுக்கும் அவ்வுறவில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்க்க

வழிகாட்டும் இடமாகவும் திருப்பரங்குன்றத்தை அவர்கள் பார்த்திருக்கின்றனர். தங்களது இன்ப துன்பங்களை வெளிப்படுத்துவதற்கு மலைக்குரிய கடவுளான முருகனை திருப்பரங்குன்றத்தின் கடவுளாக வைத்து வழிபட்டுள்ளனர். அவ்வழிபாடு அவர்களின் களவு மற்றும் கற்பு வாழ்க்கையின் அன்பு மற்றும் திருப்பரங்குன்றத்தின் மீது மக்கள் கொண்டிருந்த மதிப்பு ஆகியவற்றை வெளிப்படுத்துகின்றது. பண்டைய திருப்பரங்குன்றம் நிலவெளியானது முருகனுக்குரிய வழிபாட்டுத்தளமாக இருப்பினும், அது மதம் சார்ந்து இல்லாமல், அன்பினை அடிப்படையாகக் கொண்ட பண்பாட்டு நிலவெளியாகக் காட்சி அளித்துள்ளதைப் பரிபாடல் இலக்கியம் எடுத்துக் காட்டுகின்றது. இதனால் திருப்பரங்குன்றம் மதச் சார்பற்ற வழிபாட்டிற்கும் மானுடக் காதலுக்கும் உரிய பண்பாட்டு நிலவெளியாக விளங்கியிருக்கின்றது புலனாகின்றது.

துணைநூற்பட்டியல் :

References

இராசமாணிக்கனார்,மா. பத்துப்பாட்டு ஆராய்ச்சி. சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை,1970.

இராசேந்திரன்,பொ., சாந்தலிங்கம்,சொ. மாமதுரை. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2022.

ஐவர் சொற்பொழிவுகள்.பரிபாடல் சொற்பொழிவுகள். தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம், சென்னை, 1961.

கருணாகரன்,சா. முருகு அயர்தல்: இளம் மறியிலிருந்து யானைக் குருதி வரை – தொல் வழிபாட்டு மரபும் மாற்றமும். தமிழியல் , ISSN No:0022-4855, Issu No.127-128, ஜனவரி,ஏப்ரல் 2025, பக்.41-53.

சங்கர்,மு. தொல் தமிழரின் முருக வழிபாட்டு மரபுகள் (சங்கக் குறிஞ்சித் திணைக் கவிதைகளை முன்னிறுத்தி). சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், E-ISSN: 2582-1113,தொகுதி-4, இதழ்-S-25, 2022, DOI:10.34256//irjt224s251,பக்.1-6.

சசிகலா,வி., வசந்தமாலை, இரா. சங்க இலக்கியத்தில் முருகன் பெயர்கள். தமிழ் மொழி மற்றும் இலக்கியப் பன்னாட்டு ஆய்விதழ், E-ISSN: 2581-7140, தொகுதி-5,இதழ்-2, ஜனவரி 2023, DOI: 10.5281/zenodo.7591333,பக்.91-107.

சாமி,பி.எல். சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம். தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம், சென்னை, 1970.

சாமி,பி.எல். சங்கநூல்களில் சில உயிரினங்கள். சேகர் பதிப்பகம், சென்னை, 1993.

சாரங்கபாணி, இரா. பரிபாடல். கோவிலூர் மடாலயம்,கோவிலூர், 2003.

சாரங்கபாணி, இரா. பரிபாடல் திறன். மணிவாசகர் பதிப்பகம்,சென்னை, 1977.

சீனிவாசன், கு. சங்க இலக்கியத் தாவரங்கள். தமிழ் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்,1986.

சுப்பிரமணியம்,பெ., பாலசுப்பிரமணியன், கு. வெ., தட்சிணாமூர்த்தி,அ. (உ.ஆ .). பரிபாடல் (மூலமும் உரையும்). நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2017.

செயபால்,இரா.(உரையாசிரியர்). அகநானூறு. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2007.

சோமசுந்தரனார், பொ.வே. (உரையாசிரியர்). பரிபாடல். சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1964.

தனிநாயகம் அடிகள். நில அமைப்பும் தமிழ்க்கவிதையும். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2018.

தேவதாஸ்,சா.(தமிழில்). தமிழ்நாட்டு வரலாறு. எதிர்வெளியீடு, பொள்ளாச்சி, 2015.

பதிப்பாசிரியர் குழு. பத்துப்பாட்டு. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1981.

பரிமேலழகர்(உ.ஆ.).பரிபாடல்.டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம்,சென்னை, 2017.

பாலகிருஷ்ணன்,ஆர். அணி நடை எருமை (சங்கச் சுரங்கம் – இரண்டாம் பத்து). பாரதி புத்தகாலயம், சென்னை, 2021.

பெரியசாமி,பீ. கலை நோக்கில் திருப்பரங்குன்றம். தமிழ் மொழி மற்றும் இலக்கியப் பன்னாட்டு ஆய்விதழ், E-ISSN: 2581-7140, தொகுதி-7, இதழ்-2, ஜனவரி-2025, DOI: 10.5281/zenodo.14830552, பக்.100-121.

முருகேசன்,கதி. சங்க இலக்கியத்தில் சுனை. அரண் பன்னாட்டு தமிழாய்வு மின்னிதழ், ISSN: 2582-399X, தொகுதி-6,இதழ்-2(22),ஏப்ரல் 2024, பக்.1-10.

வரதராசனார்,மு. வ. பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை. பாரி நிலையம், சென்னை, 2018.

ஸ்ரீதர்,தி.ஸ்ரீ.,(ப.ஆ). மதுரை மாவட்டத் தொல்லியல் கையேடு. தமிழ்நாடு தொல்லியல்துறை, சென்னை, 2005.

Arora, Vibha. The Forest of Symbols Embodied in the Tholung Sacred Landscape of North Sikkim, India. Conservation and Society ,4(1), Jan–Mar 2006, pp.55-83.

Balasubramanian,A. Basics of Cultural Geography. DOI:10.13140/RG.2.2.31894.65604, https://www.researchgate.net/publication/325781826, June 2018.

Carl O saucer, Leighly, John (Editor), Land and Life - A selection from the writings of carl O saucer. University of California press, Los angeles,USA, 1963.

Craigie, P. C. Biblical and Tamil poetry : Some further reflections. Studies in Religion/Sciences Religieuses, 8(2), https://doi.org/10.1177/000842987900800206, (Original work published 1979), pp.169-175.

FRANCOIS GROS, Poetry in a Landscape -The World of Sangam Literature - https://tamilliterature.in/poetry-landscape-world-sangam-literature/ , 2018. (The article originally appeared in The Unesco Courier, Mar 1984).

Kay Anderson, Mona Domosh, Steve Pile, Nigel Thrift (Editors). Handbook of cultural geography. SAGE publication, New delhi, 2003.

Kõivupuu, M. Tradition in landscape, landscape in tradition: discourse of natural sanctuaries in Estonia. Time and Mind, 13(3), June 2020 https://doi.org/10.1080/1751696X.2020.1809861, pp.267–281.

Mokapela, S., Kretzer, M. M., & Kaschula, R. H., Blurred lines in AC Jordan's novel Ingqumbo Yeminyanya (The Wrath of the Ancestors): a literary geography of factual and imaginary spaces. Journal of Cultural Geography, 41(2), May 2024 https://doi.org/10.1080/08873631.2024.2343967, pp.152–173.

Padmanabhan, P. S. The Blend of Sanskrit and Tamil Folklore in Thiru-Murugātru-P-Padai. South Asian Review, 7(4), 1983 (online:08 Dec 2017), https://doi.org/10.1080/02759527.1983.11933110, pp.22–26.

Pal Thamburaj, Kingston & Ponniah, Kartheges. Hierarchical Grammatical Tagging for Tinai (Landscape) of Cankam Tamil Literature. Indian Journal of Science and Technology, E-ISSN:0974-5645, Volume- 9, Special Issu-1, 2016, 10.17485/ijst/2016/v9iS1/97820, pp.1-4.

Pocock, D. C. D. Geography and literature. Progress in Human Geography, 12(1), https://doi.org/10.1177/030913258801200106 (Original work published 1988),pp.87-102.

Subrahmanian.K . LOVE AND LANDSCAPE EQUATION IN TAMIL POETRY. The British Journal of Aesthetics, Volume-17, Issue-4, AUTUMN 1977, https://doi.org/10.1093/bjaesthetics/17.4.365, pp.365-367.

Taylor, K., & Lennon, J. Cultural landscapes: a bridge between culture and nature?. International Journal of Heritage Studies, 17(6), 2011, https://doi.org/10.1080/13527258.2011.618246, pp.537–554.